With the support of GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

CIFF DAILY BUZZ

In Association With
THE HINDU
NFDC cinemas of india

Powered By
தி இந்து

15TH CHENNAI INTERNATIONAL FILM FESTIVAL

14th Dec 2017



The 15th edition of the revered Chennai International Film Festival organised by the Indo Cine Appreciation Foundation with the support of the Tamil Nadu Government is back with a bang. The inaugural function is set for December 14 at 6pm at the Kalaivanar Arangam, Triplicane with actor Arvind Swamy doing the honours followed by the screening of the opening film The Square from Sweden. Screening venues for the festival which goes on till December 21 are Casino, Devi Bala, Russian Cultural Centre, Satyam Cinemas, Anna Theatre, NFDC Tagore Film Centre and Devi theatre.

About 150 films spanning the following genres will be presented at the eight-day festival - World Cinema, Country Focus (Korea), Retrospective, Contemporary German Films, Indian Panorama and Tamil Film Competition. Tamil films to battle it out at the much-celebrated festival include Thupparivalan, My Son is Gay, Vikram Vedha, 8 Thotakkal, Aramm, Kadugu, Taramani, Magalir Mattum, Maanagaram, Kurungu Bommai, Oru Kuppai Kathai, Oru Kidayin Karunai Manu and Manusangada. Besides two films of MGR as part of his centenary celebrations, films made by students of BOFTA and MGR Government and TV Institute will also be screened.

Don't miss the Inaugural Function at Kalaivanar Arangam, 6.00 p.m Onwards. Chief guest : Sri. Arvind Swamy

The Square

The Square, which also happens to be the opening film, is a Swedish satirical drama directed by Ruben Östlund and stars Claes Bang, Elisabeth Moss, Dominic West, and Terry Notary. The Square deals with publicity surrounding an art installation, and was partly inspired by an installation Östlund and producer Kalle Boman had made. Shot in Gothenburg, Stockholm and Berlin, it won the Palme d'Or at the 2017 Cannes Film Festival. In a nutshell, The Square is a poignant satirical drama reflecting our times - about the sense of community, moral courage and the affluent person's need for egocentricity in an increasingly uncertain world.

Pic(k) of the Day

The Square
Dir.: Ruben Östlund
Sweden

Kalaivanar Arangam
December 14 | 6.30 pm

Screening Schedule

Day 1 | Thursday, 14.12.17

Devi	11.00 a.m. I Remember You (Ég man þig) Dir.: Óskar Thór Axelsson Iceland | 2017 | 100' | WC	2.00 p.m. Blossoming Into A Family (Madou: After the Rain) Dir.: Hiroki Hayashi Japan | 2016 | 126' | WC	4.30 pm No Screening	7.00 p.m No Screening	No Screening
Devi Bala	11.15 a.m. Majan Dir.: Rahman Seyfi Azad Iran | 2017 | 100' | WC	2.15 p.m. BLOODY MILK Dir.: Hubert Charuel France | 2017 | 90' | WC	4.45 p.m. No Screening	7.15 p.m. No Screening	No Screening
Russian Cultural Centre	10.30 a.m. The Dybbuk of the Holy Apple Field Dir.: Yossi Somer | Israel, Germany, Switzerland	12.30 p.m. Bornholmer Street (Bornholmer Straße) Dir.: Christian Schwochow Germany | 2014 | 88' | RCS	3.00 p.m Juze Dir.: Miransha Naik 2017 | Konkani | 93'|IP	6.00 p.m. No Screening	No Screening
Anna Theatre	9.30 a.m. The President (El Presi) Dir.: Gustavo Postiglione Argentina | 2017 | 68'| WC	12.00 Noon 9 Month Stretch (9 mois ferme) Dir.: Albert Dupontel France | 2013 | 82' | WC	2.30 p.m. CLAIRE'S CAMERA (KEUL-LE-EO-UI KA-ME-LA) Dir.: Sangsoo HONG Korea, France | 2017 | 69' | CFK	4.30 p.m. No Screening	No Screening
Casino	9.45 a.m. Boozer (Malacopa) Dir.: Armando Casas Mexico | 2017 | 83' | WC	12.15 Noon MIST AND THE MAIDEN (La Niebla Y La Doncella) Dir.: Andrés Koppel Spain | 2017 | 104' | WC	2.45 p.m. Good Bye Kathmandu Dir.: Nabin Subba Nepal | 2017 | 133' | WC DCP is	4.45 p.m. No Screening	No Screening
NFDC Tagore Film Centre	11. 15 a.m. West (Westen) Dir.: Christian Schwochow Germany | 2013 | 102' | RCS DVD	02.15 p.m. Post Tenebras Lux (Felhők felett) Dir.: Carlos Reygadas Spanish, English, French	04.45 p.m. Wild (Dzika) Dir.: Nicolette Krebitz Germany | 2016 | 97' | CGF	07.15 p.m. No Screening	No Screening

CGF: Contemporary German Films | RCS: Retrospective of Christian Schwochow | CFK: Country Focus Korea
Indian Panorama: IP | Tamil Feature Film Competition: TFFC | World Cinema: WC

Highlights of Day 1

If you are one who's a sucker for thrillers, don't miss Mist and the Maiden (Spain). The movie follows a trail of a young man who ends up dead in a forest and what happens when the case is revived three years later?

If you are one who's moved by drama, the French film 'Bloody Milk' is the right fix for you. When one of his cows gets sick, a farmer will stop at nothing to save the rest of the herd. This one-liner is what Bloody Milk is all about.



The President is all about a brutal dictator coming face to face with the injustices committed by his regime when his country is taken over by revolutionists.

The Japanese movie, Blossoming into a Family, is set in the 1980s and follows Izumi (Hitomi Sato) who works at a bank and lives with her mother Ito (Yoshiko Miyazaki). On a winter night and the day before Izumi is to marry, her mother tells Izumi about her late father's dream. The movie then follows her father's dream, which is about was Izumi's marriage.

அலைச்சலுக்கு இனி அவசியமில்லை!

கான் திரைப்பட விழாவின் பத்து விருதுகளில் தலைசிறந்த விருதாகக் கருதப்படுவது 'பாம் டி'ஓர்' என அழைக்கப்படும் தங்கப்பனை விருது. அதை இந்த ஆண்டு கானில் தட்டிவந்திருக்கும் 'தி ஸ்கொயர்' **(The Square)** என்ற ஸ்வீடிஷ் மொழிப் படத்தின் திரையிடலுடன், சென்னை, திருவல்லிக்கேணியில் அமைந்திருக்கும் கலைவாணர் அரங்கில் இன்று மாலை **6.15** மணிக்கு கோலாகலமாகத் தொடங்க இருக்கிறது **15**-வது சென்னை சர்வதேசப் பட விழா.

கோவா, திருவனந்தபுரம், மும்பை, கொல்கத்தா, டெல்லி எனப் புகழ்பெற்ற திரைப்பட விழாக்கள் பல இருந்தாலும் சென்னை சர்வதேசப் பட விழாவுக்காக ஒவ்வொரு ஆண்டும் காத்திருக்கும் கண்கள் ஏராளம். டிசம்பர் **14**, முதல் **21** தேதிவரை **8** நாட்கள், உலக அளவில் விருதுகளையும் பரிசுகளையும் வென்ற **50** நாடுகளின் **150** படங்களை இடைவிடாமல் ரசிக்க அழைக்கிறது இன்டோ-சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன்.

சென்னை திரைப்பட விழாவில் திரையிடத் தேர்வாகும் உலகப் படங்களுக்குத் தணிக்கையிலிருந்து சிறப்பு விலக்கு அளிக்கிறது மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம். மாநில அரசோ திரைப்பட விழாவை நடத்துவதற்கான நிதியை வழங்கி சினிமா ரசனையை வளர்க்கத் தொடர்ந்து ஊக்கப்படுத்திவருகிறது. இந்த அமைப்புகளோடு தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் **(NFDC)**, 'தி இந்து' தமிழ், ஆங்கில நாளிதழ்களுடன் இணைந்து 'இன்டோ - சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன்' இந்தப் படவிழாவை வெற்றிகரமாக நடத்திவருகிறது.

கடந்த ஆண்டு சென்னை அண்ணா சாலை, ராதாகிருஷ்ணன் சாலை, வடபழனி ஆகிய வெவ்வேறு பகுதிகளில் இருந்த திரையரங்குகள் திரையிடலுக்காகத் தேர்வு செய்யப்பட்டதால் சினிமா ஆர்வலர்களுக்கு அலைச்சலாக அமைந்துவிட்டது. இதைக் கருத்தில்கொண்ட இன்டோ - சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன், இம்முறை அண்ணா சாலையில் வெகு அருகருகே அமைந்துள்ள தேவி, தேவி பாலா, கேசினோ, அண்ணா, சத்யம், தாகூர் பிலிம் சென்டர், ரஷ்யன் சென்டர் ஆப் சயின்ஸ் & கல்சர் ஆகிய ஏழு திரையரங்குகளைத் தேர்வுசெய்து உறுதிப்படுத்தியிருக்கிறது.

இன்டோ - சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷனின் செயலாளரும், **15**-வது சென்னை சர்வதேசப் படவிழாவின் இயக்குநருமான தங்கராஜிடம் கேட்டபோது "'உலக சினிமா' **(World Cinema)**, 'திரை தேசம்' **(Country Focus)**, 'காலம் மறக்காத படங்கள்' **(Retrospective)**, 'தற்காலத் திறமைகள்- ஜெர்மானியப் படங்கள்' **(Contemporary German Films)**, 'இந்தியன் பனோரமா' **(Indian Panorama)**, தமிழ்ப் படப் போட்டி' **(Tamil Film Competition)** ஆகிய ஆறு பிரிவுகளில் சுமார் **150** திரைப்படங்களைத் திரையிட இருக்கிறோம்.

ஜெர்மன் நாட்டு சினிமாவில் தற்போது கவனிக்கத்தக்க திறமையாளர்களாக இருக்கும் ஆறு இயக்குநர்களின் படங்களை கதே இன்ஸ்டியூட் தேர்வு **(Goethe Institute)** தேர்வுசெய்து கொடுத்திருக்கிறது.

திரைதேசம் பிரிவில் இம்முறை எதிர்பாராத இன்ப அதிர்ச்சியாக தென்கொரிய நாட்டின் ஆறு சிறந்த படங்கள் திரையிடப்படுகின்றன. அவற்றில் உலகப்புகழ் இயக்குநர் கிம் கி டுக்கின் 'தி நெட்' **(THE NET)** படமும் ஒன்று. மற்றொரு முக்கிய கொரிய இயக்குநரான ஹாங் சாங்-சூவின் **(Hong Sang-soo)** இரண்டு படங்கள் திரையிடப்படுகின்றன. 'த டே ஆஃப்டர்' **(The Day After)**, 'க்ளேர்ஸ் கேமரா' **('Claire's Camera)** ஆகிய இரண்டு படங்களுமே நடந்துமுடிந்த கான் படவிழாவில் போட்டிப் பிரிவிலும். சிறப்புத் திரையிடலிலும் இடம்பிடித்த படங்கள் இவை.

'காலம் மறக்காத படங்கள்' பிரிவில் ஜெர்மானிய இயக்குநர் கிறிஸ்டியன் ச்சோ சொவ்வின் **(Christian Schwo Chow)** மாஸ்டர் பீஸ் என்று கருதப்படும் நான்கு படங்கள் திரையிடப்படவுள்ளன. அவற்றில் புகழ்பெற்ற ஜெர்மானிய பெண்ணிய ஓவியர் பவுலாவின் வாழ்க்கை வரலாற்றுப் படமான 'பவுலா' ரசிகர்களைக் கண்டிப்பாக கவரும்" என்றார்.

இதுதவிர 'ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஷோகேஸ்' என்ற துணைப் பிரிவின் கீழ் ஆஸ்திரேலியாவின் சென்னை தூதரகம் தேர்ந்தெடுத்து அளித்துள்ள நான்கு படங்கள், டெல்லியில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் தேர்வுசெய்து அளித்துள்ள மூன்று படங்கள் திரையிடப்பட இருக்கின்றன.

தமிழ்ப் படங்களுக்கான போட்டியில் '8 தோட்டாக்கள்', 'அறம்', 'கடுகு', 'குரங்கு பொம்மை', 'மாநகரம்', 'மகளிர் மட்டும்', 'மனுசங்கடா', 'ஒரு கிடாயின் கருணை மனு', 'ஒரு குப்பை கதை', 'தரமணி', 'துப்பறிவாளன்' மற்றும் 'விக்ரம் வேதா' ஆகிய படங்கள் திரையிடப்பட இருக்கின்றன.

ஆர்.சி.ஜெயந்தன்

தி இந்து

'தி இந்து'வில் சிறப்புப் பக்கம்

சென்னை திரைப்பட விழாவில் திரையிடப்படும் படங்களின் முதல் பார்வை, ட்ரெய்லர்கள், விமர்சனங்கள், பரிந்துரைகள், செய்திகள், பேட்டிகள் மற்றும் சிறப்பு புகைப்படத் தொகுப்புகள் அடங்கிய சிறப்புப் பக்கத்தை 'தி இந்து' நாளிதழ் வலைதளம் தொடர்ந்து பதிவேற்றம் செய்து வருகிறது. எப்போதும் தொடர்பில் இருக்க...

http://tamil.thehindu.com/cinema/ciff/

வரவேற்புக்காக காத்திருக்கிறேன்!

இயக்குநர் லோகேஷ் குமார்

லோகேஷ் குமார் இயக்கத்தில் அனுபமா குமார், அஸ்வின்ஜித், அபிஷேக், கிஷோர் மற்றும் ஜெயபிரகாஷ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் படம் 'என் மகன் மகிழ்வன்'. ஆஸ்திரேலியா மற்றும் நியூயார்க் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ள இப்படம் முதன் முறையாக தமிழகத்தில் **15**-வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட இருக்கிறது.

இத்திரையிடல் குறித்து இயக்குநர் லோகேஷ் குமார் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டதாவது: முழுக்க சென்னையில் உள்ள நடிகர்களே நடித்திருப்பதால், இந்த நாளுக்காக தான் **2** ஆண்டுகளாக காத்திருந்தோம். **13**-வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் 'டாக்ஸி' என்ற ஈரானிய படம் பார்த்தேன். ஈரானிய நாட்டில் படமே இயக்கக் கூடாது என்று தடை விதித்து விட்டார்கள். அதையும் மீறி அவர் மிகவும் கஷ்டப்பட்டு படத்தை உருவாக்கினார்.

ஒரு படம் எடுக்க இயக்குநர் இவ்வளவு கஷ்டப்படும் போது, ஏன் நமது படத்தை இப்போது தொடங்கக் கூடாது என்று எண்ணி ஆரம்பித்தோம். அடுத்த **2** ஆண்டுகளில் என் படம் திரையிடப் போகிறது என்று நினைக்கும் போது சந்தோஷமாக இருக்கிறது.

சராசரி குடும்பத்தில் பிறந்த மகனோ அல்லது மகளோ ஓர் பாலினச் சேர்க்கையாளர் என தெரியும் போது, தந்தை - தாய் அதை எப்படி எடுத்துக் கொள்கிறார்கள், இந்த சமூகம் எப்படி பார்க்கிறது என்பது தான் 'என் மகன் மகிழ்வன்'. இதைப் பற்றி தெரியாத ஆட்கள் கூட, முழுக்க புரிந்து கொள்ளும் வகையில் தான் திரைக்கதையை அமைத்திருக்கிறேன். ஓர் பாலினச் சேர்க்கையாளரின் வாழ்க்கையைக் கொஞ்சம் ஆழமாக இப்படத்தில் பேசியிருக்கிறேன். தணிக்கையில் 'யு/ஏ' சான்றிதழ் கிடைத்திருக்கிறது. இதன் மூலம், இப்படம் ரொம்ப விரசமாக இல்லாமல், தந்தை - தாய் பார்வையிலிருந்து பேசும் படமாக இருக்கும் என்பது வெளிப்படை.

தமிழ் சினிமா அடுத்தாண்டுடன் **100** வருடங்கள் முடியப் போகிறது. இந்த **100** ஆண்டுகளில் ஓர் பாலினச் சேர்க்கையை இவ்வளவு ஆழமாக யாரும் சொன்னதில்லை. சில படங்களில் லேசாக கூறியிருப்பார்கள். மிகவும் கஷ்டப்பட்டு படமாக்கியிருக்கிறோம். சமூகத்திற்கு இப்படம் மிகவும் முக்கியம். அதனால் தான் நிறைய திரைப்பட விழாக்களுக்கு அனுப்பினோம்.

நாங்கள் கூறியிருக்கும் கருத்துகள் நிறைய மக்களிடையே போய் சேர வேண்டும். சென்னை திரைப்பட விழாக்களில் படம் பார்க்க வருபவர்களை நம்பித்தான் என்னைப் போன்ற இயக்குநர்கள் படம் பண்றோம். மற்ற திரைப்பட விழாக்களில் கிடைத்த வரவேற்பை விட சென்னை திரைப்பட விழாவில் இன்னும் அதிக வரவேற்பு கிடைக்கும் என நினைக்கிறேன். நாளை (டிசம்பர் **15**) மதியம் **3** மணியளவில் ரஷ்ய கலாச்சார மையத்தில் திரையிடப்பட இருக்கிறது. அனைவரும் இப்படத்தைப் பார்த்து, மற்றவர்களையும் பார்க்க வைக்க வேண்டும்.

இன்று என்ன படம் பார்க்கலாம்?

- பால்நிலவன் பரிந்துரைகள்

THE PRESIDENT

அண்ணா திரையரங்கம்: காலை **9.30** மணி

தேர்தலில் வென்ற ஜனாதிபதி அன்று இரவுக்கு முன் நகரத்தை காரில் வலம் வருகிறார். தனது முன்னாள் மனைவி, தனது காதலி, மற்றும் தனது மகளிடமிருந்து அசௌகரியத்தை ஏற்படுத்தும்விதமாக போன் அழைப்பு, இன்னும் பல சூழ்நிலைகளுக்கு நடுவில் தனது இமேஜ்ஜுக்கான ஆலோசகரை அன்று இரவு சந்திக்கிறார். இந்த கதாபாத்திரத்தின் நெருக்கத்தை நாம் கண்டறிகிற அதே வேளை, ஒரு ரகசியத்தையும் ஒரு குற்றத்தையும் மறைக்கும் இந்த கதாபாத்திரத்தின் விதியை மாற்றக்கூடியதாக அது இருக்கிறது. பல்வேறு திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு விருதுகளை வென்ற படம். இப்படம் இன்று அண்ணா திரையரங்கில் காலை **9.30** க்கு திரையிடப்படுகிறது

CLAIRE'S CAMERA

அண்ணா திரையரங்கம்: பிற்பகல் **2.30** மணி

கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு ஒரு வணிக பயணத்தில் வருகிறார் மான்ஹீ எனும் இளம் பெண். அவர் நேர்மையற்றவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்படுகிறார். அதைப் பார்க்கும் ஆசிரியை கிளாரே வேகமாக அருகில் சென்று தனது போலெராய்டு கேமராவில் அச்சம்பவத்தை புகைப்படங்கள் எடுக்கிறார். அவர் மான்ஹீ என்பதை அறிந்து அவர்மீது பரிதாபப்படுகிறார். கிளாரே போன்ற இன்னொரு ஜோடிக் கண்களும் மான்ஹீ உயிரோடு இருந்ததையும் பின்னர் சுடப்பட்டு இறப்பதையும் கண்கூடாகப் பார்க்கிறார். புகைப்படங்கள் எடுப்பதன் மூலம் கிளாரே எப்பொருளையும் கூடுதல் கவனம் செலுத்தி பார்க்கும் திறன் பெறுகிறார். கூடவே அப்பொருள்களுக்குள் ஊடுருவிக் கடந்து செல்லும் பார்வையை உணர்கிறார். இப்பொழுது கிளாரே மான்ஹீ இருவரும் மான்ஹீ எங்கு சுட்டுக்கொல்லப்பட்டாரோ அதனருகே உள்ள கஃபேவுக்கு செல்கின்றனர். இப்போது நாம் கிளாரேவின் ஆற்றலைக் காண முன்னோக்கிச் செல்கிறோம்.

MANJAN / MANJAN

தேவிபாலா: காலை **11.15** மணி

மொலாட் மற்றும் ஹாஷெம் அவர்களின் நோயுற்ற மகனை வைத்திருக்க வேண்டும் என்பதில் வாதம் உருவாகிறது, மொலாட் அவர்களின் மகனை பலம் குன்றிய நுரையீரல் உடையோர் நலனுக்கான மருத்துவ இல்லத்துக்கு அனுப்பி வைப்பதற்கு ஹாஷெம் எதிர்க்கிறான். ஷாஹெம் அவளை விவாகரத்து செய்வதென முடிவெடுப்பதற்கு இயலாமல் குழந்தையை வைத்துக்கொள்ளச் சொல்லி மொலாட் கடும் நெருக்கடியைத் தருகிறாள். ஹாஷெம் மறுமணம் புரிந்துகொள்ள விரும்பி இரண்டாவது மனைவியிடம் பேசுகிறான். ஆனால் அப்பெண்ணோ குழந்தையை பார்த்துக்கொள்ள முடியாது எனக் கூறுகிறாள். இதனால் மனநிலை உடைந்த ஹாஷெம் வேலையை விடும் நிலைக்குத் தள்ளப்படுகிறான்

BLOSSOMING INTO A FAMILY

தேவி தியேட்டர்: பிற்பகல் **2.00** மணி

''ஒரு இனிய குடும்பத்தின் அன்பை நான் எப்போதும் உணர்ந்ததில்லை.'' - லட்சியவாதியான ஈச்சிரோவால் ஒரு குழந்தையாக தத்தெடுக்கப்பட்ட சீஷிரோவின் **1948**ன் ஆண்டுக் குறிப்பிலிருந்து காணப்படும் வாசகம் இது. **1980**கள், இசுமி ஒரு வங்கியில் பணியாற்றுகிறாள். அவள் தனது தாய் இடோவுடன் வசிக்கிறாள். இருபத்திரண்டு ஆண்டுகள் கழித்து, இசுமி திருமணத்திற்கு முன்தினம், ஒரு குளிர்கால இரவு. இசுமியைப் பற்றி அவளின் மறைந்த தந்தை சீஷிரோவின் கனவைப் பற்றிச் சொல்கிறார். அவளின் தந்தையின் கனவு இசுமியின் திருமணம்தான் என்கிறார். அவ்வேளையில் அவளுடைய அன்பான தந்தையைப் பற்றி நினைத்துப் பார்க்கிறாள். இதற்கிடையில் என்ன நடந்தது? தலைகீழான காலவரிசை முறையில் இந்தப் படம் ஒருவரைப் பற்றிய கதையைக் கூறுகிறது. ஏராளமான திரைப்படவிழாக்களில் இப்படம் பல்வேறு விருதுகளை வென்றுள்ளது.

Our Sponsors and Partners

THE HINDU NFDC cinemas of india தி இந்து
TVS NIPPON PAINT Directorate of Film Festivals TAMIL FILM PRODUCERS COUNCIL TANTIS MADRAS TALKIES INSTITUT FRANÇAIS INDE Alliance Française of Madras GOETHE INSTITUT
EMBASSY OF SWEDEN 한국문화원 BOFTA GRAND DUCHY OF LUXEMBOURG CINEMA RENDEZVOUS DEVI, DEVI BALA NFDC Tagore Theatre CASINO THEATRE
SPI CINEMAS ANNA THE SAVERA OUR BUSINESS IS YOU Hot Breads QUBE MOVIEBUFF nithra bookmyshow QUBE CINEMA NETWORK V.R.Graphics Snowman Branding

Printed and Published by Indo Cine Appreciation Foundation Chennai - 600006